# வெற்றிடங்கள்

# தேசிய கல்வி நிறுவகம்

தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2026.10.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், த.பெ. இல. 21, மஹரகம எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் தயவு செய்து பதிவுத் தபாலில் அனுப்பவும். பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களை **www.nie.ac.lk** இணையதளத்தில் "News & Events" பிரிவிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

கடித உறையின் இடதுபக்க மேல் புறத்தில் விண்ணப்பிக்கும் பதவியை தயவுசெய்து குறிப்பிடவும்.

**1. பதவி :- மேலதிக பணிப்பாளர் நாயகம்**

**பணியின் வகை :- சிரேஷ்ட முகாமையாளர் (HM 2-3)**

**2. பதவி :- தொழில்நுட்ப அலுவலகர் (மின்சாரம்)**

**பணியின் வகை :- கனிஷ்ட முகாமையாளர் (JM 1-1)**

**3. பதவி :- தொழில்நுட்ப உதவியாளர்**

**பணியின் வகை :- முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் (MA 2-2)**

**விண்ணப்பதாரிகளுக்கான நிபந்தனைகள்**

- இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
- நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் மற்றும் பதவிக்குரித்தான கடமைகளைச் செய்வதற்கான உள மற்றும் உடல் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். (எவ்வாறாயினும் நீங்கள் பணிபுரியும் இடம் இல.21, ஹைலெவல் வீதி, மஹரகம / ஹைலெவல் வீதி, மீபே என்ற முகவரியில் காணப்படும்.)
- விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.
- பிறப்புச் சான்றிதழ், கல்வி / தொழில்சார் சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள் மற்றும் சேவைச் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களை தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும்.
- இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) தமது சம்பளத்தின் 8% பங்களிப்புச் செய்தல் வேண்டும் மற்றும் நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பு செய்யும்.
- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரின் பரிந்துரை இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், (நீங்கள் ஒரு பொதுத்துறை / கூட்டுத்தாபனம் / நியதிகள் சட்ட அமைப்பு அல்லது அரசாங்கத் துறையின் ஊழியராக இருந்தால்), தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள், மற்றும் இறுதி நாளுக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்கூறிய வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை தேசிய கல்வி நிறுவகம் கொண்டுள்ளது.

Gazette.lk
SINCE 2014
AMBITIONS REALIZED

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்**